செய்தி வெளியீடு எண்: 959 நாள்: 12.07.2024

செய்தி வெளியீடு

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைப்படி ஆதிதிராவிட மக்கள் ஏற்றம் பெற எண்ணற்ற திட்டங்கள் ! இளைஞர்களின் கல்வித் திட்டங்களுக்கு ரூ.2,252 கோடி நிதி ஒதுக்கீடு ! 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விடுதிக் கட்டடங்கள் ! 2,000 ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள் ! ரூபாய் 100 கோடியில் அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ! ரூபாய் 1,000 கோடியில் அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத்திட்டம் ! இந்தியாவிலேயே ஆதிதிராவிட மக்களின் நலன் காப்பதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாக விளங்குகிறது !

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் அம்பேத்கர் ஆகியோர் வழியில் முத்தமிறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்காலத்தில் ஆதிதிராவிடர்கள் மேம்பாட்டிற்காக வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக 1974–ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் இலவச வீட்டுவசதித் திட்டத்தைத் தொடங்கி குடிசைகளில் வாழ்ந்த ஆதிதிராவிடர்களுக்கு கான்கிரிட் வீடுகள் கட்டித் தந்தார்கள்.

ஆதிதிராவிடர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கு தாட்கோ நிறுவனம் மானியக் கடன்கள் மற்றும் உரிய பயிற்சிகள் வழங்கினார்கள்.

ஆதிதிராவிடர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்திட பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு வரை இலவச கல்வி வழங்கினார்கள்.

ஆதிதிராவிடர்கள் வேலைவாய்ப்புகளைப் பெற அவர்களுக்கான இடஒதுக்கீடுகளை 1971–ல் 16 சதவிகிதம் என்பதை 18 சதவிகிதமாக உயர்த்தினார்கள். ஆதிதிராவிடர் மக்களுள் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட அருந்ததியினர் மக்களுக்கு 2009–ம் ஆண்டில் 3 சதவிகித உள் இடஒதுக்கீடு வழங்கினார்கள்.

பெரியார் நினைவு சமத்துவபுரங்களை ஏற்படுத்தி சாதிமத பேதமின்றி ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் உட்பட அனைத்து மக்களுடன் சேர்ந்து வாழும் வரலாற்றுப் பெருமையை நிகழ்த்தினார்கள். ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு பாடுபட்ட சுவாமி சகஜானந்தா கலையரங்கம், தியாக சீலர் கக்கன் மணிமண்டபம், அண்ணல்

அம்பேத்கர் மணிமண்டபம், கட்டபொம்மன் தளபதி வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபம் ஆகியவற்றை கலைஞர் அமைத்தோடு, அண்ணல் அம்பேத்கர் பெயரில் இந்தியாவிலேயே முதன் முதலாக சட்டப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தி ஆதிதிராவிட சமுதாய சீர்திருத்தவாதிகள் மற்றும் முன்னோடிகளை உலகிற்கு அடையாளம் காட்டினார்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் தொடங்கப்பட்டு 112 ஆண்டுகளுக்குப் பிறகு முதன் முதலாக ஓர் ஆதிதிராவிடர் ஜஸ்டிஸ் ஏ. வரதராஜன் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிப்பதற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகள் காரணமாகும். பின்னர், இவர் உச்சநீதிமன்ற நீதிபதியாகப் பொறுப்பேற்றார் என்பது ஆதிராவிடருக்குச் செய்த முத்திரைச் சாதனையாகும். இது மட்டுமல்ல தமிழ்நாட்டின் காவல்துறை தலைவராகவும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவராகவும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளராகவும், முதலமைச்சரின் செயலாளர்களாகவும் ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை நியமித்து ஆதிதிராவிடர் சமுதாயத்திற்கு பெருமைகளை சேர்த்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தான்.

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள்** அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு சிலை, அயோத்திதாச பண்டிதருக்குச் சிலை, திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்குச் சிலை மற்றும் மணிமண்டபம் உள்ளிட்ட ஆதிதிராவிட சமுதாயப் பெருமக்களுக்கு சிறப்புகளைச் செய்து வருகிறார்கள்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியினை பின்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒருங்கிணைந்த சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறார்கள்.

## அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக, ஆழ்ந்த சிந்தனைகளுடன் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் **"அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்"** 2023 – 2024– ஆம் ஆண்டு மே திங்களில் அறிவிக்கப்பட்டது.

இந்த, அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களைத் தொழில் முனைவோராக்கும் ஓர் அருமையான உன்னதமான திட்டமாகும்.

இத்திட்டத்திற்கான தொழில் முதலீட்டில் 35 சதவீதத் தொகையை மானியமாகவும், 65 சதவீதத் தொகைக்குரிய வங்கிக் கடன் வட்டியில் 6 சதவீதத் தொகையை வட்டி மானியமாகவும் அளிக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் மிகவும் குறுகிய காலத்திற்குள்ளாகவே 2,136 ஆதி திராவிட பயனாளிகளுக்கு வங்கிகளால் கடன்கள் அனுமதிக்கப்பட்டன. அவர்களில் தகுதியானவர்களான 1,303 தொழில் முனைவோர்க்கு அரசு மானியமாக மட்டும் 159.76 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. இதில் 288 மகளிர் தொழில் முனைவோர் 33.09 கோடி ரூபாயை மானியமாகப் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம்**

ஊரகப் பகுதிகள் மட்டுமல்லாது நகர்ப்புறப் பகுதிகளிலும் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் உட்கட்டமைப்புகளை மேம்படுத்திட அயோத்திதாச பண்டிதர் குடியிருப்புகள் மேம்பாட்டுத் திட்டம் ஆண்டுக்கு ரூ.200 கோடி வீதம் ஐந்தாண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கு இவ்வாண்டில் ரூ.230கோடி அனுமதிக்கப்பட்டு பணிகள் நடைபெறுகின்றன.

**மாண்புமிகு முதலமைச்சர் உருவாக்கிய ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாநில அளவில் ஆதிதிராவிடர் பழங்குடியினரின் சட்டபூர்வமான உரிமைகளைப் பாதுகாக்கவும், அவர்களுடைய முக்கியமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய **" தமிழ்நாடு மாநில ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல ஆணையம்** எனும் அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

**வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம்**

வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழக்கின் தன்மைக்கு ஏற்றவாறு, 85,000/- ரூபாயிலிருந்து 8 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் வரை வழங்கப்பட்டு வந்த தீருதவித் தொகை குறைந்தபட்சம் ஒரு இலட்சம் ரூபாயாகவும், அதிகபட்சமாக 12 இலட்சம் ரூபாயாகவும், மாநில அரசு நிதி மூலம் உயர்த்தி வழங்கப்படுகிறது.

வன்கொடுமையால் பாதிக்கப்ட்ட குடும்பங்களைச் சார்ந்த 154 பேருக்கு வேலைவாய்ப்புகளும், 535 பேருக்கு ஓய்வூதியமும், ஒருவருக்கு இலவச வீட்டுமனையும் வழங்கப்பட்டுள்ளன.

**சாதி வேறுபாடுகளற்ற முன்மாதிரி கிராமங்களுக்குப் பரிசுகள்**

சாதி வேறுபாடுகளற்ற மயானங்கள் கொண்டுள்ள 37 மாவட்டங்களில் ஒரு கிராம்ம் வீதம் 37 முன்மாதிரிக் கிராமங்களில் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த அரசு சார்பில் தலா 10 இலட்சம் ரூபாய் வீதம் ரூ.3.70 கோடி பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

**எழுத்தாளர்களுக்குப் பரிசுத்தொகை உயர்வு**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்கள் தொடர்பான கலை, பண்பாடு, இலக்கிய படைப்புகளை ஊக்குவிக்கும் பொருட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரில் சிறந்த எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூ.50,000/- என்பது ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது .ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எழுத்தாளர்களின் சிறந்த தமிழ்ப் படைப்புகள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிட இளைஞர்களின் கல்வி வளர்ச்சிக்கு**
**75.27 விழுக்காடு நிதி ஒதுக்கீடு –**

2024–2025ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் நலத்துறைக்கு மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.2,992.57 கோடி. இதில், கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் ரூ.2,252.51 கோடி. அதாவது, 75.27 விழுக்காடும், பழங்குடியின இளைஞர்களின் கல்விக்காக 43.23 விழுக்காடும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிட சமுதாய இளைஞர்களின் கல்வி மேம்பாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் செலுத்தி வரும் ஆர்வமும் அக்கறையும் எளிதில் விளங்கும்.

**சட்டக் கல்விக்குச் சிறப்புச் சலுகை**

அரசு சட்டக் கல்லூரிகளில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் சிறந்த நிறுவனங்களிலும் மூத்த வழக்கறிஞர்களிடமும், உட்பயிற்சி (Intenship) பெறுவதற்கு உதவித்தொகை ரூ.10 ஆயிரம் வழங்கும் திட்டத்தில் 774 மாணவர்களுக்கு ரூ.77.40 இலட்சமும், சென்னை, மதுரை உயர்நீதிமன்ற நீதியரசர்களிடம் பயிற்சி பெற உதவித் தொகையாக ரூ.15,000 வீதம் 15 மாணவர்களுக்கு ரூ.65 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

**வெளிநாடுகளில் உயர்கல்வி பெறுவோர்க்கு ஊக்கத் தொகை**

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் பொறியியல், நிதி, உலக சுகாதாரம், உலகத் தொழில், சட்டம் போன்றவைகளில் முதுகலை படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு மேற்கொள்ளும் ஆதிதிராவிட – பட்டியலின மாணவர் ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ.36 இலட்சம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் 54 ஆதிதிராவிட – பட்டியலின இளைஞர்கள் ஆண்டுதோறும் பயன்பெறுகின்றனர்.

**ஆதிதிராவிட – பழங்குடியின மாணவர்கள்**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அளித்து வரும் உயர்த்தப்பட்ட உதவித்தொகை, விடுதி வசதிகள் முதலிய பல்வேறு சலுகைகளால் தமிழ்நாடு முழுவதிலும் அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், பழங்குடியின உண்டி உறைவிடப் பள்ளிகளிலும் 28,85,168 ஆதிதிராவிட மாணவர்களும் 25,337 பழங்குடியின மாணவர்களும் பயின்று வருகின்றனர்.

ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின இளைஞர்களின் உயர்கல்வி ஆர்வத்தை தூண்டும் பொருட்டு முனைவர் பட்டப் படிப்புகளுக்கான கல்வி உதவித் தொகையினை ரூ.50,000 என்பது ஒரு இலட்சம் ரூபாய் என்று உயர்த்தப்பட்டுள்ளது.

ரூ.100.00 கோடி மதிப்பில் 150 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் 480 புதிய வகுப்பறைகள் மற்றும் 15 அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.

**விடுதி மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட உணவுப்படி**

மாணவர்களுக்கு சரிவிகித சத்தான உணவினை வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பள்ளி மாணவர் விடுதிகளுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உணவுப்படி ரூ.1,100/–லிருந்து, ரூ.1,400/–ஆகவும், கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலுவோருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் உணவுப்படி ரூ.1,100/– என்பது ரூ.1,500/–ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. இதனால், 1,71,844 ஆதிதிராவிட பழங்குடியின மாணவர்கள் பயன்பெறுகின்றனர்.

12–ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கருக்கு உயர் தொழில்நுட்பக் கல்லூரிகளில் சேர்வதற்கான JEE / NEET / CLAT நுழைவுத் தேர்விற்கான பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

மாணவர்களின் தங்கள் கல்வியினை சிறப்பாக பயிலும் பொருட்டு 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு இடங்களில் விடுதிக் கட்டடங்களும், விடுதிகள் பராமரிப்புப் பணிகளும் நடைபெறுகின்றன.

**<u>பொருளாதார மேம்பாடு:</u>**

2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் மின் இணைப்புகள் ரூ.46.65 கோடி மதிப்பீட்டில் வழங்கப்பட்டுள்ளது

2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு நீர்ப் பாசனத்திற்கான பி.வி.சி., குழாய்கள் (P.V.C. Pipes ) வாங்குவதற்காக தலா ரூ.15,000/– வீதம் ரூ.3 கோடி வழங்கப்பட்டுள்ளது

2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு புதிய மின்மோட்டார் வாங்க தலா ரூ.10,000/– வீதம் ரூ.2 கோடி மானியங்களாக வழங்கப்பட்டுள்ளது.

10,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பட்டதாரிகள் வேலைவாய்ப்பு / போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் பயிற்சிகள் வழங்க ரூ.10.00 கோடி செலவிடப்பட்டுள்ளது

2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மதிப்புக் கூட்டப்பட்ட தொழில் திட்டங்கள் தொடர்பான பயிற்சிகள் ரூ.250 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

100 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தமிழ்நாடு சிமெண்ட் கழகத்தின் விற்பனை முகவராக ரூ.90.00 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

40 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்திடவும், 1,000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்குத் தீவனப்புல் வளர்க்கவும் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் ரூ100 கோடி செலவில். வழங்கப்பட்டுள்ளன.

13 மகாத்மா காந்தி தொழிலாளர்கள் ஒப்பந்தம் மற்றும் திறன் மேம்பாட்டுக் கூட்டுறவு சங்கங்கள் மூலம் ரூ. 196 கோடி மதிப்பீட்டில் சுகாதார அங்காடிகள் அமைக்கப்படுவதற்கு ரூ. 98 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வாழ்வாதாரத் தொழில்களை மேற்கொள்ள தாட்கோ வழங்கும் ரூ.2.50 இலட்சம் மானியத் தொகை ரூ.6.00 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் வசிக்கும் வீடற்ற 443 இருளர் பழங்குடியின குடும்பங்களுக்கு ரூ.19.38 கோடி செலவில் வீடுகள் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் ஆண்டுதோறும் ரூ.100 கோடி மதிப்பீட்டில் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

17 மாவட்டங்களில் ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படுகின்றன. .

அழிவின் விளிம்பிலுள்ள பண்டைய இருளர் பழங்குடியினர்களுக்கு (Particularly Vulnerable Tribal Groups) 1094 புதிய வீடுகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தர அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

1000 தூய்மைப் பணியாளளுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் கட்டும் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய வீடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டுள்ளது.

சாதி வேறுபாட்டைக் களைய சமத்துவச் சுடுகாட்டுடன் சமூக நல்லிணக்கம் வளர்த்து வாழும் 37 மாவட்டங்களில் உள்ள 37 கிராமங்களுக்கு ரூபாய் 10 இலட்சம் நிதி வழங்கப்பட்டு, அக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றது முதல் ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருகின்றது.

2023 – 2024 ஆம் நிதியாண்டில் மாநில அரசு நிதியுதவியுடன் 12 நபர்களை கொண்ட மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஒரு குழுவிற்கு ரூ.2.50,000/– வீதம் 229 குழுக்களுக்கு ரூ.5.72 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது.

தூய்மைப் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக தேசிய துப்புரவுப் பணியாளர்கள் நிதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின்மூலம் 587 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தார்களுக்கு ரூ.1.09 கோடி கால முறை கடன் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆதிதிராவிட சமுதாய மக்களின் முன்னேற்றத்தில் தனிக்கவனம் செலுத்தி வருவதன் காரணமாக வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்து வருகிறது. அரசின் சீரிய முயற்சி காரணமாக ஆதிதிராவிட இளைஞர்கள் கல்வியிலும் தொழிலிலும் முன்னேற்றம் அடைந்து சமத்துவ சமுதாயத்தின் பிரதிநிதிகளாக உருவாகி வருகிறார்கள். இந்தியாவின் தலைசிறந்த உயர்கல்வி நிறுவனங்களிலும், வெளிநாடுகளிலுள்ள சிறந்த கல்வி நிறுனங்களிலும் உயர்கல்வி படிப்பினையும், முனைவர் படிப்பினை மேற்கொண்டு வருகின்றனர்.

****************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu